வாசிக்க: திருப்பாடல் 27:1-14

***“கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை வலிமைபெறச் செய்வார்; மனவுறுதியுடனிருந்து கர்த்தருக்கே காத்திரு” (சங் 27:14)***

கரடும் முரடும் கடினமுமான பாதைகளின் வழியாய் நடந்துவந்த திருப்பாடகனின் கூற்று இது. மனத்தொய்வு என்பதே கடவுளின் பிள்ளைகளுக்கு எதிராய்ப் பிசாசு பயன்படுத்தும் சக்தி வாய்ந்த ஆயுதம். சோர்புண்டாக்கும் அம்புகளால் ஒருபோதும் தாக்கப்படாத பரிசுத்தவான் எவருமில்லை. கலக்கத்தையும் கவலையையும் மேற்கொள்ள ஒரே வழி கர்த்தருக்குக் காத்திருத்தலே.

கடவுள் ஒருவரே சர்வ வல்லவர். நம்மெல்லாருக்கும் பலமின்மை உண்டு. கடவுளுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் நாம் தாழ்மையுடன் நடந்துகொள்ளும்படி அவர் இயலாமைகளினாலும் வரம்புகளினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்! நாம் கடவுளுக்குக் காத்திருக்கும்போது ஆன்மீக வலிமையானது நமது இயல்பான திறமைகளை ஆட்கொள்ளுகிறது. “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகளைப்போல் இறக்கையடித்து உயரே செல்வர். அவர்கள் ஓடுவர், களைப்படையார்; நடந்து செல்வர், சோர்வடையார்!” (ஏசா 40:31). பயந்தாங்கொள்ளிகளான சீடர்கள் கூடிவந்து பத்து நாட்கள் கடவுளுக்குக் காத்திருந்து அவரது ஆவியின் வல்லமையைப் பெற்றபோது ஆன்மீகப் புரட்சியாளராய் மாறினர் (லூக் 24:49; அப் 1:5,8,14; 17:6ஆ).

இருள் சூழ்ந்த வேளையில் வெற்றி அனுபவிக்க வேண்டுமானால் நம்பிக்கையுடனும் நிச்சயத்துடனும் கர்த்தருக்குக் காத்திருப்பது ஒன்றே வழி. நமது கைகள் இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கலாம். நமது இதயங்களோ மேலெழுந்து செல்ல இறக்கைகள் கொடுக்கப்படும். அதுதான் பிலிப்பி நகர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த பவுலும் சீலாவும் பெற்ற அனுபவம்.

நேற்றுதான் கடவுளது வல்லமை யாவரும் பார்க்கக் கூடியவாறு நெருப்புப் பிழம்பாய் விண்ணிலிருந்து இறங்கியிருக்கும். அடுத்த நாளே நாம் சோர்பில் தொய்ந்துபோய்க் கிடக்கவும் வாய்ப்புண்டு. செத்துப்போகவேண்டுமென்பதே நமது விருப்பமாயிருக்கும். மறுபடியும் காற்றும், நிலநடுக்கமும், நெருப்பும் வரலாம். நேற்றைய அனுபவத்தின் அடிப்படையில் நாம் இவைகளில் கடவுளைக் காண முயலுவோம். அவரோ இவற்றில் ஒன்றிலும் இருக்கமாட்டார். இங்குதான் பொறுமையோடு கர்த்தருக்குக் காத்திருப்பது நமக்குக் கைகொடுக்கும். அவர் “அமர்ந்த மெல்லிய குரலில்” நம்மோடு பேசுவார் (1 இரா 18:38; 19:9-13). சிலவேளைகளில் கடவுளது வழிகள் “சுழல் காற்றிலும் புயல் காற்றிலும்” இருக்கும் (நாகூம் 1:3ஆ). மற்ற வேளைகளில் அவர் “அமர்ந்த தண்ணீர்கள்” வழியாய் நம்மைக் கொண்டுசெல்வார் (சங் 23:2ஆ). கடவுளைப் பொறுத்தவரை இப்படித்தானென்று ஒரே வகை கிடையாது. வழக்கமாகவே அவருக்குக் காத்திருப்பவர்கள் மட்டுமே அவரைக் கண்டுகொள்வர்.

*நீ பக்தியை விடாமல் பொறுத்திருக்கையில்,*
*கர்த்தர் நீ நினையாமல் இருக்கும் நேரத்தில்*
*உன் துக்கத்தை அகற்ற வெளிச்சம் காண்பிப்பார்;*
*நீ நன்மைக்காகப் பட்ட சலிப்பை நீக்குவார்! (பாமாலை)*
*— Joseph Haydn, 1732-1809*